வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

Field Work Centre

தவணைப் பரீட்சை, யூன் - 2017

Term Examination, June - 2017

தரம் :- 13 (2017)	இந்துநாகரிகம்	புள்ளித்திட்டம்

(1) 4	(11) 4	(21) 1	(31) 5	(41) 4
(2) 1	(12) 2	(22) 1	(32) 5	(42) 1
(3) 2	(13) 1	(23) 4	(33) 1	(43) 5
(4) 3	(14) 2	(24) 2	(34) 1	(44) 3
(5) 5	(15) 5	(25) 3	(35) 3	(45) 2
(6) 1	(16) 1	(26) 2	(36) 4	(46) 1
(7) 2	(17) 3	(27) 2	(37) 3	(47) 2
(8) 4	(18) 4	(28) 3	(38) 5	(48) 2
(9) 5	(19) 5	(29) 4	(39) 2	(49) 5
(10) 1	(20) 2	(30) 3	(40) 4	(50) 3

(1) அ)
- ஆகமங்கள் ஆன்ம ஈடேற்றத்தினை நோக்கமாக கொண்டு திருவுருவ அமைப்பையும் அவை சார்ந்த கிரியை முறைகளையும் வகுத்துக் கூறுகின்றன.
- கிரியை நெறியானது கோயில் கிரியை, வீட்டுக்கிரியை என இரு வகையில் நோக்கப்படுகின்றது.
- கோயில் கிரியையானது காஷணம், பிரதிஸ்டை உற்சவம், பிராயத்தம் எனும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- நித்திய, நைமித்திய, காமிக கிரியை பற்றியும் நோக்கப்படுகின்றது.
- கிரியைகள் ஆற்றும் விதிகள், பூசையின் அங்கங்கள் மந்திர உச்சாடனம், நிவேதனப் பொருள்கள் என்பன பற்றியும் கூறுகின்றன.
- ஆகமங்களில் வரும் பூஜா விதிப்படலாம், மந்திராவதாரப் படலம் போன்ற பிரிவுகளில் மேற்குறித்த விடயங்கள் இடம் பெறுகின்றன.
- கிரியை முறைகள் திருக்கோவிலையும் திருவுருவங்களையும் மையமாக கொண்டவை.
- மேற்குறித்த விடயங்களை விளக்கி எழுதப்பட வேண்டும்.

ஆ)
- சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியாபாதம், கிரியாபாதம், யோகா பாதம், ஞானபாதம் என்னும் உட்பிரிவுகளை உடையன.
  - சரியா பாதம் :- பிராயச்சித்தி விதி, பவித்திரவிதி, ஆலய அமைப்பு சுற்று பிரகாரம், கோபுரம், பரிபாலகர் அமைப்பு, உமாமகேசுவரர் இலக்கணம், சிவலிங்க இலக்கணம், சிவலிங் இலக்கணம் என்பவற்றைக் கூறுதல்
  - கிரியா பாதம் :- மந்திரம், உற்சவம், நித்திய, நைமித்திய காமிய கிரியைகள், சிவசின்னங்கள் அணியும் முறை பற்றிய கருத்துக்களை கூறுதல்.
  - யோக பாதம் :- அட்டாங் யோகம், அட்டமா சித்திகள் ஆறுவகை ஆதாங்கள், பற்றிய விளக்கத்துடன் தியானம், செபம் அனுஷ்டானம் போன்ற விதிகளை கூறுதல்.

- ஞானபாதம் :- பதி, பசு,பாசம் போன்றவற்றின் உண்மை பதியின் இயல்பு, அன்மாவின் வீடு பேறு ஆணவ மலத்தின் தன்மை முதலிய விளக்கத்துடன் புவனங்களின் தோற்றம் பற்றிய விடயங்களை கூறுவது.

இ)
- சிவாகமங்கள் ஆலய வழிபாட்டுடன் சித்தாந்த சிந்தனைகளையும் கொண்டுள்ளது.
- ஆகமம் என்ற சொல்லில் முப்பொருள் விளக்கம்
- கிரணம், ரௌவரம், பௌஷ்கரம் முதலான ஆகமங்களில் அதிகமாக தத்துவக் கருத்துக்கள்.
- கிரண ஆகமம் பதி படலம், பசு படலம், மாயா படலம் சத்தி நிபாத படலம் போன்றவற்றில் தத்துவ உண்மைகளை விபரிக்கின்றது.
- யோக பாதத்தில் அட்டமா சித்திகள், அட்டாங்க யோகங்கள் சிறப்பாக விளக்கப்படுகின்றது.
- ஞான பாத்தில் பதி, பசு, பாசம் பற்றிய கருத்துக்கள்
- சைவ நாற்பாதங்கள், குரு லிங்க சங்கம வழிபாடு , சிவசின்னங்கள் பற்றிய விளக்கங்கள் நான்கு பாதங்களில் இடம் பெறுகின்றன.
- கொடிமரம் - பதி, கொடிச்சீலை - பசு, கொடிக்கயிறு - பாசம்
  சிவலிங்கம் - பதி நந்தி - பசு, பலிபீடம் - பாசம்
  திரை சீலை - மாயை
- ஐந்தொழில் தத்துவம் (Eg:- தேர்த்திருவிழா - அழித்தல்)
- ஆன்மாவின் இறுதி இலட்சியமான வீடு பேறாகிய சுத்தாத்து வித முத்தி பற்றிய கருத்துக்கள்.
- முப்பொருள் உண்மை, அவற்றின் இயல்புகள், ஐந்தொழில்கள் ஆன்ம ஈடேற்றம், மும் மலங்கள் போன்ற பல விடயங்களை கூறுகின்றன.
- பிற்கால தத்துவ சிந்தனைகள் தோற்றம் பெற சிவாகமங்கள் வழிகாட்டியமை

(7+7+6=20 புள்ளிகள்)

(2) அ) சோழப் பேரரசர்கள் சைவ நெறியில் தீவிர ஈடுபாடும் அபிமானமும் கொண்டதனால் பேராதரவு வழங்கினர். சிவபாத சேகரன்,திருநீற்றுச் சோழன், திரிபுவனச் சங்கரவாதிகள் போன்ற விருதுப் பெயர்களை சூடியிருந்தமை சைவத்தின் மீது அவர்களின் ஈடுபாட்டையும் பத்தியையும் வெளிப்படுத்துகின்றது. நிலையான ஆட்சியால் நாடு வளம் நிறைந்தமையால் இந்துப் பண்பாடுகள் பல துறைகளிலும் வளர்ச்சி கண்டது.

- மன்னர்கள் பெற்ற வெற்றிகள் புதிய ஆலயங்கள் அமைப்பதக்கும் பழைய ஆலயங்களை புனருத்தாரணம் செய்வதக்கும் வழி செய்தன.
- வட நாட்டிலிருந்து பிராமணரை வரவழைத்து வேதம், வேதாங்கங்களைக் கற்பிக்கவும் ஆலய கிரியைகளை செய்வதக்கும் வழி செய்தனர்.
- நடராச சின்னம் அரச சின்னமானது ஆலயங்களுக்கு வேண்டிய தானங்களையும் மானியங்களையும் வழங்கினர். சாசனங்களில் திருப்பணிகளையும் தானங்களையும் பற்றி அறியலாம்.
- அரசர்களது ஐன்ம நட்சத்திர தினங்களில் சிறப்பான வழிபாடுகள் இடம் பெற்றன.
- வேதவிருத்தி, புராண விருத்தி, பாரத விருத்திக்கு மானியங்கள் வழங்கப்பட்டன.
- நாயன்மார்களுக்கு படிமங்கள், சிவனடியார் குரு பூசைகள் சிறப்பான இடம் பெற்றன.
- அரசர்களது இராஜ குருமாராக சைவர் குருமார்கள் இடம் பெற்றனர்.
- சைவ திருமுறைகள் தொகுக்கப்பட்டன. பண் வகுக்கப்பட்டன ஓதுவார்கள், பிடார்கள் என்போர் பண்ணோடு பாடினார்கள்
- திருமுக்கூடல் என்னும் இடத்தில் மடங்கள் அமைத்து சைவப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆ)
- திருமுறைகள் தொகுக்கப்பட்டன.
- பதி நான்கு மெய்கண்ட சாஸ்திர நூல்கள்
- திருத் தொண்டர் புராணம் - சேக்கிழார்
- கந்தபுராணம் - கச்சியப்பர்

- திருவிசைப்பா - சேந்தனார்
- திருப்பல்லாண்டு - சேந்தனார், கருவூர் தேவர்
- கோயில் நான்மணிமாலை, திருக்கழு மும்மணிக்கோவை - பட்டினத்தார்
- திவ்வியப்பிரபந்தங்கள் தொகுக்கப்பட்டன.
- கம்பராமாயணம் உருவானது
- வேதாந்த தீபம், வேதாந்த சாரம், ஸ்ரீபாஷ்யம், வேதாந்த சங்கிரகம், கீர்த்தனா சங்கிரகம், ஸ்ரீஸ்துதி தோற்றம் பெற்றமை.
- பத்ததிகள் தோற்றம் பெற்றமை

இ)
- தமிழகத்தில் சோழர் ஆட்சிக் காலத்தில் கலைகள் உண்ணத வளர்ச்சி கண்டன.
- கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை மரபொன்றினை சோழர் காலத்தில் உருவாக்கினார்.
- கட்டடக்கலை வரலாற்றில் உன்னதகாலம் நான்கு காலமாக பிரித்து நோக்கப்படல்
  1. விஜயாலயன் முதல் ராந்தகன் வரை (கி.பி 850 - 950)
  2. பராந்தகன் முதல் இராஜராஜன் வரை (கி.பி 900 - 1070)
  3. இராஜராஜன் முதல் 1ம் குலோத்துங்கள் வரை (கி.பி 1000 - 1070)
  4. 1ம் குலோத்துங்கள் முதல் 3ம் இராஜேந்திரன் வரை (கி.பி 1070 - 1250)
- விமானங்கள், தூபி, தூண்கள், மண்டபங்கள் சுற்றுப்பிரகாரங்கள், என்பன எழில் கொண்டவை
- தஞ்சைப் பெருங்கோவில், கங்கை கொண்ட சோழேச்சரம் என்பவற்றை அடிப்படையாக கொண்டு விளக்குதல்.
- நடனம், இசை, ஓவியம் வளர்ச்சி கண்டமை
- கல்லிலும் உலோகத்திலும் அமைக்கப்பட்ட விக்கிரகம்கள்
- சிற்பங்களில் நாட்டியக்கரணச் சிற்பங்கள் சிறப்பானவை
- கோயில்களில் ஓதுவார்கள், நடன மாதர்கள் நியமித்து ஆதரவு வழங்கியமை
- சோழர் கால கலைகளின் வளர்ச்சியே இந்து நாகரிகத்தின் மேன்மையை உலகறியச் செய்தது.

(7+7+6=20 புள்ளிகள்)

(3) அ)
- இந்தியாவைப் போலவே ஆலய வழிபாடு முக்கியம் பெற்றதோடு பஞ்சாயதனக் கோயில்கள் காணப்பட்டன.
- இந்து முறைப்படி யாகங்கள் அரண்மனைகளில் இராஜசூயம் முதலான வேள்விகளும் வைதீகச் சடங்குகளும் இடம் பெற்றன.
- சிவனையும் திருமாலையும் இணைத்து வழிபட்டமை அகத்தியர் வழிபாடு குறிப்பாக பட்டாரகுரு என அழைத்தமை.
- விநாயகர், அம்மன், கார்த்திகேயன், திருமால் போன்றவர்களின் தேவகோட்டங்கள் அமைக்கப்பட்டன.
- கம்போடியாவில் தேவராஜ வழிபாடு அரண்மனைக்குரிய வழிபாடாக காணப்பட்டமை
- புராண இதிகாச செல்வாக்கு விக்கிரக வழிபாடு திருப்பாவை, திருவெம்பாவை
- பௌத்த இந்துமத ஒற்றுமைகள்
- புத்தரையும் சிவனையும் தொடர்புபடுத்தும் மரபு - சிவபுத்தர்
- இந்து விழாக்கள் தைப்பூசம், வருடப்பிறப்பு
- முடி சூட்டு விழாவில் திருமுறை ஓதும் பழக்கம்
- அரசர்கள் கடவுளர்களால் அனுப்பப்பட்டவர்கள் என்ற கருத்து
- அங்கோ வாட் சிவாலயம், பத்திரேஸ்வரர் கோயில், பிரம்பனால் கோயில், வாட்போ கோயில், பத்துமலைக் கோயில்
- பிராமணங்களுக்கு தானம்

ஆ)
- மகாபாரதக் கதை அர்ச்சுன விவாகம்,பாரத யுத்தம் என்னும் பெயர்களில் பரப்பப்பட்டுள்ளது.
- சமஸ்கிருத மொழி தென்கிழக்காசிய மொழிகளுடன் சங்கமமாகியுள்ளது.
- அர்த்த சாத்திரம், நாட்டிய சாத்திரம், திருவெம்பாவை செல்வாக்குப் பெற்றமை
- அரண்மனைகளிலே அர்த்தசாத்திரம், பகவத்கீதைக் கூற்றுக்கள் சிறப்பு பெற்றமை

- வேதம், புராணம், இதிகாசம், காவியம் , நாடகம் பற்றிய குறிப்புக்கள் கம்போடியா, தாய்லாந்து சாசனங்களில் காணப்படுகின்றன.
- இந்திய இலக்கியங்களைப் பின்பற்றி மலாய மொழியில் பல நூல்கள் எழுதப்பட்டமை
- யாவா நாட்டு வடமொழிச் சாசனங்கள் இலக்கிய மரபை எடுத்துக் காட்டுகின்றன.

(இ)
- கோயிற் கட்டடக்கலை, விக்கிரக்கலை, சிற்பக்கலை, அங்கோ வாட் கோவிலமைப்பு, பிரம்பனால் கோயில்.
- இந்து சமய மரபு வழிக்கலை வடிவங்கள் பலவும் கோயில்களில் இடம் பெற்றமை
- நாட்டார் வழக்கில் இராமாயண மகாபாரத கதைகள் நாட்டிய நாடகங்களாக காணப்படுகின்றமை
- பௌத்தக் கோயில்களில் இராமாயணக் சிற்பங்கள்
- இராமாயணக் கதைகளைத் தழுவி கூத்துக்கள் ஆடப்பட்டன.
- செங்கல், கருங்கல் கொண்டு கட்டிடம் அமைக்கும் முறை
- ஆந்திர பிரதேசக்கலை, கலிங்கலை, பல்லவக் கலை முறைகள் பின்பற்றப்பட்டன.

(7+7+6=20 புள்ளிகள்)

(4) அ)
- சைவ சித்தாந்தம் காட்சி கருதல் உரை எனும் மூவகை பிரமாணங்களை ஏற்று உண்மைப் பொருளை ஆராய்கின்றது. குறிப்பாக கருதல் (அனுமானம்) உனர (ஆப்த வாக்கியம்) ஆகிய முறைகளில் இறையுண்மை நிருபிக்கப்படுகின்றது.
- உலகத்தின் உண்மை தேர்றத்தினைக் கொண்டு அதாவது பானை உண்டெனில் அதனைப் படைத்தவனும் உள்ளான். (தோற்றம் - பானை , இயக்கம் - குடை)
- படைப்பின் நோக்கத்தினைக் கொண்டு அதாவது ஆன்மா செய்த வினைகளின் பயன்கள் அவ்வான்மாக்களைச் சென்று சேராது. அவ்வாறு வினைகளுக்கேற்ப அவற்றைச் சேர்க்க ஒருவர் வேண்டும் அவ்வாறு நிறைவான பொருள் எதுவே அதுவே கடவுள்.
- குறைபாடு பொருட்களைக் கொண்டு அதாவது குறைபாடுடைய பொருட்களை இனம் காண்பதக்கு ஒரு நிறைவான பொருட் வேண்டும் அவ்வாறு நிறைவான பொருள் எதுவே அதுவே கடவுள்
- அநுபூதி பெற்ற தத்துவ ஞானிகளது வாக்குகளையும் தேவார திருவாசக் கருத்துக்களும் சித்தாந்த நூல்களும் பதியின் உண்மையை நிறுவுகின்றது.

ஆ)
- மும்மலத் தொடர்பால் மூவகை அவத்தைகள்
  (கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை)
- ஆன்மாக்கள் மும்மலங்களால் கட்டுண்டது
- விஞ்ஞானகலர் - ஆணவம் மட்டும்
- பிரளயாகலர் - ஆணவம், கண்மம், மட்டும்
- சகலர் - ஆணவம், கன்மம் ,மாயை உடையவர்
- ஆணவம் - அகந்தை, மமதை, ஏற்படுத்துவது
- கன்மம் - பிறவிக்கு அடிப்படை
- மாயை - தனு, கரண, புவன போகத்துக்கு அடிப்படை
- ஆணவம் உயிரின் குணமன்று குற்றமே என்பதை பல சைவசித்தாந்த நூல்கள் மூலம் விளக்கம்.

இ)
- இறைவன் பேரறிவாளன் ஆன்மாக்கள் சிற்றறிவு
- இறைவன் சித்து ஆன்மா சதசத்து
- இறைவனின் ஆணைக்குட்பட்டு ஆன்மாக்கள் வினைப்பயன்களுக்கேற்ப பிறவி எடுக்கும்
- ஆன்மாவுக்குரிய தனு, கரண, புவன, போகங்களைத் தருபவனும் இறைவனே
- ஆன்மாக்கள் இறைவன் பால் பக்தி கொண்டு நாற்பாதங்கள் மூலம் விடுதலை பெற வாய்ப்புள்ளது.
- ஆன்ம விடுதலைக்காக இறைவன் ஐந்தொழிலை ஆற்றுகின்றார்.
- இறைவன் ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்கின்றான்
- இறைவன் ஆன்மா தொடர்பை தாடவை என்ற சொல்லால் குறிப்பிட்டு விளக்குதல்

- இறைவன் குரு வடிவாக வந்து உதவுவார்

ஈ) • மும்மலங்களிலிருந்து விடுபடுவதே ஆன்மாவின் இலட்சியம்
- முத்திக்குரிய வழிகளாக குரு, லிங்க, சங்கம வழிபாடு, திட்சை சிவசின்னங்கள், ஆலயவழிபாடு, சிறப்பாக சைவ நாற்பாதங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம்
- இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம்
- முத்தி நிலையை தாடலை எனும் சொல்லால் குறிப்பிடும்
- முத்தி நிலையில் ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்த போதும் தனி இயல்பை முற்றாய் இழப்பதில்லை
- சுத்த அத்வைத நிலை (5+5+5+5=20 புள்ளிகள்)

(6) அ) • பிரஸ்தான திரயமான உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை
- இவற்றுக்கு சங்கரர் எழுதிய உரை - சங்கர பாஷ்யம்
- மாண்டூக்கிய காரிகையும் அடிகேலியது

ஆ) • பிரமம், ஆன்மா, உலகம் என்பனவற்றில் உள்பொருள் பிரமமே ஏனைய இரண்டும் அதன் தோற்றமே என்பதன் மூலம் ஒருமைக் கொள்கையை நிரூபித்தல்
- பிரமம், ஆன்மா, பற்றிய இருமை இன்மை கொள்கையே அத்வைதம் போதிக்கும் பிரமக் கோட்பாடு
- ஆன்மாவும் பிரமமும் ஒன்றே. கேவல அத்வைதம் பிரம்ம பரிபூரண வாதம், ஒருமை வாதம் ஏகான்ம வாதம், போன்ற பல பெயர்கள் இதற்குரிய விளங்கங்களாக உள்ளன.
- பிரமம் மட்டும் உண்மை அநாதியானது அந்த மற்றது. அழிவில்லாதது. எங்கும் செறிந்த நீக்கமற நிறைந்திரும்பது
- பிரமம் எதனைப் போன்றதாகவும் இல்லையெனக் கூறலாமேயொழிய எதுவாக உள்ளது. என விளங்க வைப்பது கடினம்
- பிரமத்திற்கு இரண்டு நிலைகள்
  i) நிர்க்குண நிலை ii) சகுண நிலை
- ஒரேயொரு மூலப்பொருளாயுள்ள பிரமம் பல சீவன்களாகின்றது. ஆன்மாவே பிரமம், தத்துவமஸ அகம் பிரம்மாஸ்மி, சோகம், அஸ்மி, எனும் உபநிடத மகாவாக்கியங்கள் இதற்கு அடிப்படை

இ) • உலகம் பொய்யானது என்னும் கருத்து
- விவர்த்த வாதக் கோட்பாடு - தொடர்புபடுத்தப்பட்டு விளக்குதல்
- மாயை அவித்தை தொடர்புகள் - உலகத்தோற்றம் திரிவுக் காட்சியாக விளங்குதல்
- மாயை பிரமத்தின் சக்தி - அநிர்வசனீயம்

ஈ) • ஞான மார்க்கமே மேலானது
- ஆன்மா தன்னை பிரமம்மென உணர்தலே முத்தி
- உணர்வதக்குரிய வழிமுறைகளாக கேட்டல், சிந்தித்தல், தெளிதல், என்பவற்றோடு வழிபாடு, நல்லொழுக்கம் நியம நிட்டை என்பனவும் அவசியம்
- அத்வைத முத்தி
- சிவன் முத்தி, விதேக முத்தி பற்றியும் குறிப்பிடுகின்றார்.

(5+5+5+5=20 புள்ளிகள்)

(6) • கலைகளில் இசைக்கலையின் சிறப்பு
- இறைவனுக்கும் இசைக்குமான தொடர்பு

சரஸ்வதி - வீணை, கண்ணன் - புள்ளாங்குழல்

நந்திதேவர் - மத்தளம், சிவன் - உடுக்கு

- வட இந்திய, தென் இந்தியா வரலாற்றுக் காலங்களில் இசை பற்றிய குறிப்புகள் விளங்குதல்
- இந்து சமய மரபில் இறை வழிபாட்டில் இசையின் தொடர்பு தோத்திரங்கள், கீர்த்தனங்கள், பஜனைகள், கீத வாத்தியங்கள்

- புராண படனம், மங்கல இசை, வேதபாராயணம் திருமுறை பாராயணம்
- சங்கீத வளர்ச்சியில் மும் மூர்த்திகளின் பங்கும் பணியும்
- கர்நாடக இசைக் கலைஞர்களின் இசை நூல்கள்
- கோயில் சிற்பங்களில் இசைக் கருவிகள் இசையின் முக்கியத்துவத்தினை உணர்த்துவன.
- இந்துமத மரபில் இசைக்கலை இந்து சமய வழிபாட்டில் இசை, கோயில்களில் இசையும் பதிக மரபும் இசைக் கருவிகள் பிற்கால இசை மரபுகளும் எதிர்பார்க்கப்படும்.
- தற்காலத்தில் உயர் கல்விப்பீடங்களில் இசைக் கலை வளர்ச்சிக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை. *(20 புள்ளிகள்)*

(7)
- மனித வாழ்வை மேம்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டவற்றில் புருடார்த்தங்களும் ஒன்றாகும்.
- மனித ஆன்மீக இலட்சியத்தை அடைய கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளை அடிப்படையாக கொண்டதாகும்.
- புருடார்த்தங்கள் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்பவையாகும். அதனை வடமொழியில் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்பர்.
- அறத்தின் வழி நின்று அவ்வழியில் பொருளைத் தேடி அதனை அனுபவிக்கும் போது இன்பம் கிடைக்கும் இதன் வழி வீடுபேறு சித்திக்கும்.

அறம் :- அறம் என்பது தர்மம் ஆகும். இந்து ஒருவன் கடைப்பிடிக்க வேண்டிய மேலான ஒழுக்கம் கடமைகளை இது குறிக்கின்றது. ஸ்வதர்மம், குலதர்மம், இராஜ தர்மம், ஆச்சிரம தர்மம் முக்கியமானவை. அறம், வாழ்வின் நான்கு நிலைகளுடன் தொடர்பானது. அறம், நீதி, ஒழுக்கம், சமூகம் வாழ்வியலூடாக விளக்கப்படும் ஆத்மீக விடுதலையுடன் அறம் தொடர்பானது.

பொருள் :- பொருள் என்பது அர்த்தம் என்பதாகும் பொருள் இன்றி தனிமனிதனோ சமுதாயமோ வாழ்க்கை நடாத்த முடியாது. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்ற கூற்று வாழ்க்கைக்கு பொருள் அவசியம் என்பதனை வெளிப்படுத்துகின்றது. பொருளை இராஜசேவை வாணிபம், விவசாயம் முதலிய தொழில்களால் பொருளீட்டலே சிறப்பானது. "தீவினை விட்டிடடல் பொருள்" என்பதக்கு அமைவாக பெற்ற பொருளை பகுத்துண்டு வாழவேண்டும்.

இன்பம் :- இன்பம் என்பது காமம் என்பது காதலர் இருவர் கருத்து ஒரு மித்து ஆதரவு படுவதேயாகும். தனித்தனியாக வாழ்ந்த தலைவனும் தலைவியும் இல்லறத்தில் தலைவன் தலைவிக்கும் தலைவி தலைவனுக்காய் வாழும் நிலை பின்னர் பிள்ளைகளுக்காகவும் தொடர்ந்து உலக உயர்கள் மீது அன்பு பரிணமிக்கும் நிலையாகும். இன்பமான சிற்றின்பம் அற வழியிலேயே அனுபவிக்கப்பட வேண்டும்.

வீடு :- இது மோட்சம் எனப்படும் அறம் , பொருள், இன்பம் ஆகிய மூன்றினையும் ஒழுங்கு முறையில் கடைப்பிடிக்கும் போது வீடு பேறு கிடைக்கும் "கண்டவர் விண்டிலர் விண்டிலர் கண்டிலர்" என்ற கருத்து இந்த இன்பத்தை அடைந்த ஆன்மாவுக்கு மறு பிறப்பு இல்லை. ஔவையார் புருடாந்தம் பற்றி கூறும் போது

"ஈதல் அறம் தீவினை விட்டிடடல் பொருள் எந்நாளும்
காதலர் இருவர் கருத்தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம் பரனை நினைத்தும் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

- புருடார்த்தங்கள் பற்றி விளக்கம் போது நூல்களிலும் இலக்கியங்களிலும் கூறப்பட்ட கருத்துக்களை முன்வைக்க வேண்டும். (திருக்குறல், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் அறநூல்கள்) *(20 புள்ளிகள்)*